=

05 பெப்ரவரி, 2022

**கண்டன அறிக்கை**

**மனித உரிமைகள் சட்டத்தரணியும் ஆதரித்து வாதாடுநருமான அம்பிகா சற்குணநாதன் உடனான கூட்டொருமைப்பாடு**

மனித உரிமைகள் சட்டத்தரணியும் ஆதரித்து வாதாடுநரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் மற்றும் நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியத்தின் தலைவருமான அம்பிகா சற்குணநாதன் அவர்கள் 27 ஜனவரி 2022 அன்று இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய பாராளுமன்ற உப குழுவின் விளக்கத்தின்போது கூறிய விடயங்கள் தொடர்பாக வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் 4 பெப்ரவரி 2022 அன்று வழங்கப்பட்ட பதில் குறித்து கீழே கையொப்பமிட்டுள்ள சிவில் சமூகங்களைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களாகிய நாம் மிகுந்த கரிசனை கொள்கின்றோம். சற்குணநாதன் அவர்கள் தன்னுடைய சமர்ப்பிப்பில், இலங்கையில் மனித உரிமைகள் சூழ்நிலை தொடர்பான விமர்சனப் பகுப்பாய்வினையும், இலங்கை அதன் பிரஜைகள் தொடர்பில் கொண்டுள்ள சர்வதேச மற்றும் தேசிய கடப்பாடுகளையும் முன்வைத்திருந்ததுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுக்கு பரிந்துரைகளையும் வழங்கியிருந்தார்.

எழுப்பப்பட்ட பிரச்சினைகளைக் கணிசமாகக் கையாள்வதற்கு பதிலாக, இலங்கை அரசாங்கமானது, இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக கொள்கைசார் ஆய்வு, ஆதரித்து வாதாடல் மற்றும் பகிரங்க சேவை ஆகியனவற்றில் ஈடுபட்டு அவை தொடர்பாகக் குற்றமற்றப் பதிவுகளைக் கொண்டுள்ள தனிநபரொருவர் மீது அவதூறு செய்வதற்கு முற்பட்டுள்ளது. தமிழ் செயற்பாட்டாளர் மற்றும் ஆய்வாளரொருவரின் சுயாதீனமான நியாயப்பிரசாரத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கும் இடையே ஒப்புமையினைக் காண்பிப்பதற்கு எத்தனித்துள்ள வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் முயற்சியானது தேவையற்றதும், தீங்கானதும் மற்றும் சில்லிட வைக்கின்றதுமான ஒன்றாக அமைந்துள்ளது. தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்கள் மீது வேறுபாடானத் தாக்கத்தினை ஏற்படுத்தத்தக்க அரசாங்கக் கொள்கைகள், அரச நிறுவனங்கள் மற்றும் அவர்களின் நடைமுறைகளை வெளிப்படுத்திக்காட்டுகின்றமையானது ஏதோ ஒரு வழியில் 'சமுதாயங்களுக்கிடையிலான வெறுப்பினைத் தூண்டுகின்றது' என்பதுடன், இது 'சமூக ஒற்றுமைக்கு' ஊறு விளைவிக்கக்கூடியதாகும் என்ற குற்றச்சாட்டு மிகவும் பிரச்சனைக்குரியதாய் அமைகின்றது. அண்மைய கடந்த காலத்தில் இலங்கையில் முக்கிய தனிநபர்கள் மற்றும் சிறுபான்மை சமுதாயங்களின் உறுப்பினர்களை இலக்கு வைப்பதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம் என்பன அரசினால் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அடிப்படையாகக் கொண்டு பாரக்கின்றபோது, இவ்விடயம் அச்சுறுத்துகின்றவகையில் அமைந்துள்ளது.

தொழில் உரிமைகள், மனித உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நடத்தை பற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டே இலங்கை ஜி.எஸ்.பி+ வர்த்தக சலுகைகளைத் தக்க வைத்துக் கொள்ளுமா அல்லது அதனை இழக்குமா என்பது தீர்மானிக்கப்படும்.

மனித உரிமைகள் தொடர்பான ஆதரித்து வாதாடுதலே இலங்கை பொருளாதாரத்திற்கு முக்கியமானதாய் அமைகின்ற ஜி.எஸ்.பி+ வரிச் சலுகையினை இழக்கச் செய்கின்றது என்ற யோசனையானது நேர்மையற்றதாகும்.

ஆபத்தான உட்குறிப்புக்களைப் பயன்படுத்தி அரசாங்க நிறுவனமொன்றினால் தைரியமாக மற்றும் வெளிப்படையாகப் பேசுகின்ற சிவில் சமூக அமைப்புக்களின் உறுப்பினர்களை இலக்கு வைத்தலை, உடன்பாடின்மைகளை மற்றும் வெளிப்படுத்தலுக்கான சுதந்திரத்தினை அடக்குவதனை இலக்காகக் கொண்ட அச்சுறுத்தல் வடிவமொன்றாகவே நாம்

கருதுகின்றோம். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் செய்யப்பட்டுள்ள இத்தகைய அறிக்கைகள், ஜனநாயகம் மற்றும் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தில் இடைத்தரகராக செயற்படுகின்ற சிவில் சமூகங்களின் ஈடுபாட்டினையும், பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் மற்றும் தனிநபர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்காக செயற்படுதலையும் தடுப்பதனை இலக்காகக் கொண்டுள்ளன என நாம் நம்புகின்றோம்.

சற்குணநாதன் அவர்களைப் போல சிவில் சமூகத்திலுள்ள பலர் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கான செயற்பாட்டு சூழல் மற்றும் அடக்குமுறைமிக்கதான புதிய சட்டமொன்றின் அச்சுறுத்தல் என்பன குறித்து தமது கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் பாதிக்கப்பட்டு தப்பி வாழ்வோர், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடக பணியாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்போர் அரச செயற்பாட்டாளர்களால் தொடர்ச்சியாக துன்புறுத்தலுக்கு ஆளாகின்ற சம்பவங்கள் குறித்தும் நாம் ஆழ்ந்த கரிசனை கொள்கின்றோம். சிவில் சமூக அமைப்புக்கள் செயற்படுவதற்கான சூழலொன்றினை உருவாக்குவதற்கு, சிவில் சமூகம் பங்காளராகக் கருதப்படுகின்றது என கூறுகின்ற வெறும் உறுதிமொழிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் செயலகத்தினை புதிய அமைச்சொன்றிற்கு மாற்றுதல் ஆகியன மாத்திரம் போதாது. இது தொடர்பாகவும், சற்குணநாதன் அவர்களால் சொல்லப்பட்டவையும் எங்களால் ஆதரிக்கப்படுகின்றவையுமான ஏனைய கணிசமான பிரச்சினைகள் பற்றியும் அரசாங்கத்துடன் நேர்மையான, கொள்கைசார் மற்றும் ஆக்கபூர்வமான உரையாடல்களில் ஈடுபடுவதற்கு நாங்கள் விருப்பமாயுள்ளோம். எவ்வாறெனினும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் இம்முறையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இலக்கு வைக்கப்படுதலானது உறுதிப்பாட்டினையோ அல்லது நம்பிக்கையினையோ ஊக்குவிக்காது.

நாங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இவ் அறிக்கையினை கண்டிக்கின்றோம் என்பதுடன் அம்பிகா சற்குணநாதன் அவர்களுடனும், இலங்கையில் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் உண்மையான நல்லிணக்கத்தினை மேம்படுத்துகின்ற மற்றும் பாதுகாக்கின்ற செயன்முறையில் ஈடுபட்டுள்ள ஏனைய அனைத்து சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனும் இணைந்து ஒருமனதாய் நிற்கின்றோம்.